செய்தி வெளியீடு எண்: 373 நாள்: 25.06.2019

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 24.6.2019 அன்று தலைமைச் செயலகத்தில், மீன்வளத் துறை சார்பில் நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரியான மீன்வளப் பொறியியல் கல்லூரிக்கு 12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கட்டடத்தை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக திறந்து வைத்தார்கள். மேலும், 194 கோடியே 80 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மீன்வளத் துறை கட்டடங்கள், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக வளாகத்தில் கட்டப்பட்டுள்ள புரட்சித் தலைவி அம்மா அரங்கம், கால்நடை மருத்துவமனைகள் மற்றும் அதிநவீன ஆவின் பாலகம் ஆகியவற்றை திறந்து வைத்தார்கள்.

இந்தியாவிலேயே முதன்முறையாக, மீன்வளத்தில் தனித்துவ தொழில் கல்வி வழங்கும் வகையில் தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகம் 2012–ஆம் ஆண்டு நாகப்பட்டினத்தில் துவக்கப்பட்டது. இப்பல்கலைக்கழகம் தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம் என்று 16.2.2018 அன்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இப்பல்கலைக்கழகம், மீன்வள அறிவியல் சார்ந்த பல்வேறு பிரிவுகளில் தரமான தொழிற் கல்வியை வழங்குதல், மீன்வள அறிவியலில் உள்ள முதன்மையான பிரிவுகளில் அதிநவீன தொழில்நுட்பங்களை உருவாக்குவதற்கு முறையான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல், மீன்வளர்ப்போர், மீனவர், வேலையில்லா பட்டதாரிகள் மற்றும் தொழில் முனைவோர்களுக்கு மீன்வள இணை தொழிற் கல்வியை வழங்குதல் போன்ற பணிகளை ஆற்றி வருகிறது.

நாகப்பட்டினம் – தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரியான மீன்வளப் பொறியியல் கல்லூரியில் இந்தியாவிலேயே முதன்முறையாக நான்கு வருட மீன்வளப் பொறியியல் இளங்கலை தொழில்நுட்ப பட்டப்படிப்பு 2015–ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. இக்கல்லூரியின் அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்தும் வகையில், சுமார் 24,000 சதுர அடி கட்டட பரப்பளவில் 12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மீன்வளப் பொறியியல் கல்லூரிக் கட்டடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள். இப்புதிய கல்லூரி கட்டடமானது, வகுப்பறைகள், கல்லூரி முதல்வர் அறை, ஆசிரியர்கள் அறை, ஆய்வகங்கள், கருத்தரங்கு அறை, கழிப்பறைகள், குடிநீர் வசதி ஆகிய வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது.

மேலும், கன்னியாகுமரி மாவட்டம், தேங்காப்பட்டணம் கிராமத்தில் 97 கோடியே 40 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள மீன்பிடி துறைமுகம்; தூத்துக்குடி மாவட்டம், வேம்பார் கிராமத்தில் 10 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள மீன் இறங்குதளம்;

தஞ்சாவூர் மாவட்டம், மல்லிப்பட்டினம் கிராமத்தில் 60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மறுகட்டுமானம் மற்றும் நவீனப்படுத்தப்பட்ட மீன்பிடி துறைமுகம், கரையூர்தெரு கிராமத்தில் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள வலைப்பின்னும் கூடம், அணுகுசாலை மற்றும் குழாய்ப் பாலங்கள், ஏரிப்புறக்கரை கிராமத்தில் 1 கோடியே 23 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள வலைப்பின்னும் கூடம் மற்றும் உலர் மீன் சேமிப்பு அறை;

காஞ்சிபுரம் மாவட்டம், கோவளத்தில் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள மீன் இறங்குதளம்; கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரியில் 2 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட மீன்பண்ணை; நாகப்பட்டினம் மாவட்டம், நம்பியார் நகர் கிராமத்தில் 1 கோடியே 30 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மீன் ஏலக்கூடம் மற்றும் மீன் ஏலத்தளம்;

திருவள்ளூர் மாவட்டம் – மாதவரம், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக வளாகத்தில் 12 கோடியே 76 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புரட்சித் தலைவி அம்மா அரங்கம்:

கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் திருவாரூர் மாவட்டம் – குடவாசல் மற்றும் மன்னார்குடி ஆகிய இடங்களில் 1 கோடியே 5 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலும், கடலூர் மாவட்டம் – மேலபட்டாம்பாக்கத்தில் 52 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலும் அறுவை சிகிச்சை அறை, ஆய்வக அறை, சிகிச்சைக்கூடம் ஆகிய வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள மூன்று கால்நடை மருத்துவமனைகள்;

பால்வளத் துறை சார்பில் பெரம்பலூர் மாவட்டம், துறைமங்கலம், திருச்சி – பெரம்பலூர் சாலையில் சுமார் 1000 சதுர அடி பரப்பளவில் 53 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அதிநவீன ஆவின் பாலகம்;

என மொத்தம் 206 கோடியே 80 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை அமைச்சர் திரு. டி. ஜெயக்குமார், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு.ஓ.எஸ். மணியன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் திரு.உடுமலை கே. ராதாகிருஷ்ணன், மாண்புமிகு பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் திரு.கே.டி. ராஜேந்திரபாலாஜி, தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் கே.கோபால், இ.ஆ.ப., தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் நிர்வாக இயக்குநர் திரு.சி.காமராஜ், இ.ஆ.ப., கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநர் திரு.ஏ.ஞானசேகரன், இ.ஆ.ப., மீன்வளத் துறை இயக்குநர் டாக்டர் கீ.சு. சமீரன், இ.ஆ.ப., தமிழ்நாடு கால்நடை மருத்துவ

அறிவியல் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 25.6.2019**